Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 11 உ வியாழக்கிழமை (27-09-1990) ஹிஜ்ரி 1411 ரபி. அப். 07 ஓசை 222

## மண்டைதீவில் இருந்தும் இராணுவம் வெளியேறிவருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முகாமைவிட்டு இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து மண்டைதீவில் நிலை கொண்டிருந்த இராணுவ அணியும் வெளியேறத் தொடங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

மண்டைதீவில் இருந்த இராணுவத்தினர் ஹெலிகொப்டர் மூலம் பலாலிக்குக் கொண்டு செல்லப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை மண்டை தீவில் இருந்து இராணுவத்தினர் விரைவில் வெளியேறி விடுவார்கள் எனக் கொழும்பு இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## நேற்றுக் காலையும் விமானக் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்மீது நேற்றுக் காலையும் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்தியது.

காலை ஆறு மணியளவில் வை 12 ரக விமானம் நகரப் பகுதிகள் மீது குண்டுகளை வீசியது இதனால் சில கட்டடங்கள் சேதமடைந்தன. 6-30 மணியளவில் நகரில் வட்டமிட்ட இரு பொம்மர் விமானங்கள் நகர்மீதும், முத்திரைச் சந்தைப்பகுதியிலும் பலத்த தாக்குதலை நடத்தியது இதனால் முத்திரைச்சந்தைப்பகுதியில் இரண்டு வீடுகளும், மூன்று கடைகளும் பலத்த சேதம் அடைந்தன. இங்கிருந்த அனைவரும் பதுங்கு குழியில் தஞ்சமடைந்ததினால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. (க)

## உடுப்பிட்டியில் விமானத்தாக்கு; ஒருபெண்மரணம்; ஒருவர்காயம்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டியில் நேற்றுக் காலை இரண்டு பொம்மர் விமானங்கள் குடிமக்கள் செறிவாகவாழும் பகுதியில் பலத்த குண்டுத்தாக்குதலை நடத்தி உள்ளன.

காலை6-30மணிக்கு வானில் வட்டமிட்ட சிறிலங்கா விமானப்படையின் இரண்டு பொம்மர் விமானங்கள் குடி மனைகள் மீது குண்டுகளை வீசியது. இந்த குண்டுத் தாக்குதலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொருபெண் படுகாயமடைந்தார். இவர் அவசர சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அப்பகுதியில் இருந்த மூன்று வீடுகள், நான்குகடைகள் பலத்த சேதமடைந்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)



புலிக்கொடி கம்பீரமாகப் பறக்கும் யாழ்கோட்டையின் கிழக்குப் புறவாயில் தோற்றம்

### இராணுவத்தால் அக்கரைப்பற்றில்

## 4 இளைஞர் வெட்டிக் கொலை நால்வரைப்பற்றி தகவலில்லை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்று கிராமத்தைச் சேர்ந்த நான்கு தமிழ் இளைஞர்களை இராணுவத்தினர் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்படி கிராமத்தைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் தேடுதல் நடத்தி அங்கிருந்து எட்டு தமிழ் இளைஞர்களை கைதுசெய்துசென்றனர். செல்லும் வழியில் நான்கு இளைஞர்களை வெட்டிக் கொலை செய்து அவர்களின் சடலங்களை அருகில் உள்ள வாவி ஒன்றுக்குள் போட்டுவிட்டுச் சென்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து தமிழ் விவசாயிகள் சவளக்கடையில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில்'சவளக்கடைப் பகுதியில் ஐந்து தமிழ் விவசாயிகள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்,

சவளக்கடையிலுள்ள நெல் வயலுக்கு கடந்தசனிக்கிழமை (22-9-90) அறுவடைக்காகச் சென்ற தமிழர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினரும் ஊர்காவற்படையினரும் தாக்குதல் நடத்தியதில் ஐந்துபேர் கொல்லப்பட்டனர்.

இதனால் அப்பகுதியில் தமிழ் விவசாயிகள் தமது விளைவுகளை அறுவடை செய்ய முடியாத நிலையில் உள்ளனர். (க)

# தீலீபன் நினைவு நாளன்று

# யா/கோட்டைபுலிகள்வசம்

# திலீபன் நினைவு நாளன்று

# யா/கோட்டை புலிகள் வசம்



## யாழ். மாவட்டத் தளபதி பானு புலிக்கொடியை ஏற்றினார்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முகாமைவிட்டு சிறிலங்கா இராணுவம் நேற்று முன்தினமிரவு ஓடியது. விடுதலைப்புலிகள் யாழ். கோட்டை இராணுவ முகாம்மீது நேற்றுமுன்தினமிரவு தொடுத்த பாரிய தாக்குதலைத் தொடர்ந்தே இச்சம்பவம் இடம்பெற்றது.

திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவு தினமான நேற்று திலீபனின் கனவு நனவாகியது. நேற்றுக்காலை திலீபன் மரணித்த நேரமான 10.48 மணிக்கு விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி பானு கோட்டையில் தமிழீழ சுதந்திரத்தின் சின்னமாகிய புலிக் கொடியை ஏற்றினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)



புலிகளின் யாழ். மாவட்ட தளபதி பானு

## வரிப்புலி பூட்டுகள் உடைத்தது

கோட்டை அதிர்ந்தது! கோட்டை அழிந்தது
கொடியவர் பாசறை எரிந்தது.
வாட்டிய துன்பம் வடிந்தது; விடுதலை
''வரிப்புலி'' பூட்டுகள் உடைத்தது
வேங்கைகள் பாய்ந்தன; விழுந்தது கோட்டை
வியப்புடன் எழுந்தனர் மக்கள்
தாங்கிய கொடியினைத் ''தளபதி'' ஏற்றினான்
தமிழரின் தலைகள் நிமிர்ந்தன.

என்றுதான் கோட்டையில் ஏறுமோ புலிக்கொடி
என்றவன் நினைவுநாள் அன்று
வென்றனர் புலிகள்; வியத்தகு வீரம்
விளைத்தனர் விடுதலைப் புலிகள்.
வன்னியும், மன்னார், திருமலை மட்டு
நகரதும் வென்றிடும் தமிழா!
அன்னியர் ஓடி அகலுவர்; வீதியில்
ஆடடா, பாடடா தமிழா!

— புதுவை இரத்தினதுரை

## கோட்டையைக் கைப்பற்றியே தீருவோம் என்ற வேட்கை நிறைவேறியது

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''ஆக்கிரமிப்பாளரின் இருப்பிடமாகவும் சின்னமுமாக உள்ள கோட்டையை என்ன விலை கொடுத்தும் கைப்பற்றியே தீருவோம் என்ற எமது வேட்கையை நிறைவேற்றி விட்டோம்'' என நேற்று விடுதலைப் புலிகள் மக்கள முன்னணியினர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தமிழீழ மண்ணில் ஆக்கிரமிப்புச் சின்னங்களில் ஒன்றாக 370 வருடங்கள் விளங்கிய யாழ். கோட்டை இரண்டரை மணித்தியாலக் கடும் சண்டையின் பின்னர் நேற்று அதிகாலை எம்மால் கைப்பற்றப் பட்டது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த இராணுவ வெற்றியானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிப் பாதையில் ஒரு வரலாற்றுத் திருப்பு முனையை ஏற்படுத்தி உள்ளது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில்நாம் கோட்டைமீது தொடுத்த உக்கிரமான தாக்குதலால் கோட்டையின் தென்புற வழியாக இருந்த சிறு கடல் வழியாக இராணுவத்தினர் மண்டைதீவிற்கு அண்மையில் உள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் ஆயுதங்கள் மீட்பு

யாழ். கோட்டை இராணுவ முகாமிற்கள் பிரவேசித்த விடுதலைப்புலிகளின் முதல் அணியினர்ஒரு பகுதியில் இருந்துபல ஆயுதங்களை மீட்டுள்ளனர், ஆர். பி ஜி - 1, ஆர். பி ஜி. ஷெல் - 4, ஏ. கே.எல்.எம் ஜி. - 1, ரி 56 - 2, ரி 81. - 1, தொங்கன் 40 எம்.எம். - 1, ரம் மசீன்-1, எஸ் புளொட்டர், -02 ரவைக்கூடுகள்-07. கைக்குண்டு - 02. மேலும் மீட்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

## நகரில் இருந்து கிராமங்கள் வரை

## தியாகி திலீபனுக்கு மக்கள் அஞ்சலி

யாழ். குடாநாடு எங்கும் லெப். கேர்ணல் திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப் பாணக் கோட்டையிலிருந்து சிறு கிராமங்கள் ஈறாக அனைத்து இடங்களிலும் தமிழ் மக்களின் விடிவிற்காக தனது உயிரை அர்ப்பணித்த திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி புலிக்கொடி பறக்க விடப்பட் டிருந்தது.

திலீபனின் நினைவுகளைத் தட்டி எழுப்பும் கீதங்கள் யாழ்ப்பாணக் கோட்டையில் இசைத்தது. திலீபனின் கோட்டைப்பேச்சு எனப் புகழப்படும் சொற்பொழிவு அடங்கிய ஒலி நாடா கோட்டையிலிருந்து ஒலிபரப்பப்பட்டது.

வீதிகள் தோறும் திலீபனின் திருவுருவப் படங்கள் அலங்காரப்பந்தல்களில் வைக்கப் பட்டு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தலாயினர் வாழை தோரணங்கள் மற்றும் மலர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி மண்ணிலே தாய்நாட்டுக்காக களத்தில் சாய்ந்த வீர வேங்கைகளின் விபரங்கள் (13-6-1990 க்குப்பின்)

## பகுதி 2

| இல. | இயக்கப்பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | நிலை | காலம் | வீரமரணமடைந்தசம்பவம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | பரிசன் | - | - | வீரவேங்கை | 15-6-90 | சூசைப்பிள்ளையார் குளத்தில் | வவுனியா |
| 02. | ராமு | - | - | வீரவேங்கை | 15-6-90 | ,, ,, | ,, |
| 03. | நித்திலன் | – | புளியங்குளம் | வீரவேங்கை | 28-6-90 | தாண்டிக்குள இராணுவத்தால் | ,, |
| 04. | கணேசலிங்கம் | – | மகாறம்பைக்குளம் | வீரவேங்கை | 28-6-90 | ,, ,, | ,, |
| 05. | மெளலீசன் | - | இராசேந்திரகுளம் | வீரவேங்கை | 28-6-90 | ,, ,, | ,, |
| 06. | தயாபரன் | - | இராசேந்திரகுளம் | மேஜர் | 18-6-90 | வை. பு. கு. இ. மோதலில் | ,, |
| 07. | செந்தில் | - | கோவில்குளம் | 2ஆம் லெப்ரினன்ட் | 28-6-90 | தா. யா. வீ வ. இ. மோதல் | ,, |
| 08. | இன்பன் | – | இராசேந்திரகுளம் | வீரவேங்கை | 28-6-90 | ,, ,, ,, ,, ,, ,, | ,, |
| 09. | மங்களா | - | கல்படு 2ஆம் படிவம் | லெப்ரினன்ட் | 28-6-90 | ,, ,, ,, ,, ,, ,, | ,, |
| 10. | நொசான் | - | கோப்பாய் | வீரவேங்கை | 04-6-90 | மா. க. வ மு. இ. மோதல் | ,, |
| 11. | ஜெசி | – | சாளம்பைக்குளம் | வீரவேங்கை | 04-6-90 | ,, ,, ,, ,, ,, ,, | ,, |
| 12. | விபுலானந்தன் | - | விளாத்திக்குளம் | வீரவேங்கை | 04-6-90 | ,, ,, ,, ,, ,, ,, | ,, |
| 13. | குணேஸ் | ரவி | உடையார்கட்டு | வீரவேங்கை | 18-7-90 | கிளி. இரா. மு. தாக்குதல் | |
| 14. | ஜசீர் | இருசாந்தினி | சம்மணங்குளம் | வீரவேங்கை | 17-7-90 | மாங் இரா. மு. தாக்குதல் | முல் - தீவு |
| 15. | மிதுனன் | மா. ஸ்ரீதரன் | 4ஆம் கட்டை, சிலாவத்தை | வீரவேங்கை | 17-7-90 | ,, ,, ,, ,, | ,, |
| 16. | பிரதீப் | சு. சதானந்தன் | கொக்குத் தொடுவாய் | கப்டன் | 17-7-90 | ,, ,, ,, ,, | ,, |
| 17. | சலீம் | சி. யோகநாதன் | விசுவமடு | வீரவேங்கை | 15-7-90 | வசாவிளானில் ஷெல் தாக்குதல் | ,, |
| 18. | ஜரோ | செ. மாணிக்கவாசகர் | நெரியகுளம் | வீரவேங்கை | 15-7-90 | ,, ,, ,, ,, | ,, |
| 19. | சேரன் | க. சேனாதிராசா | ஒதியமலை | கப்டன் | 15-7-90 | ப. இரா. முகாம் தாக்குதல் | ,, |
| 20. | வரதன் | வெ. மதியழகன் | தென்னமரமாவடி | 2ம் லெப்ரினன் | 15-7-90 | வசாவிளானில் தாக்குதல் | ,, |
| 21. | நந்தன் | வி. ராஜேஸ்வரன் | நெடுங்கேணி | லெப்ரினன்ட் | 18-7-90 | மாங். இரா. முகாம் தாக்குதல் | ,, |
| 22. | கஜன் | தி. பொன்னம்பலம் | நெடுங்கேணி | கப்டன் | 15-6-90 | ,, ,, ,, ,, | ,, |
| 23. | சசி | வ. குலபாலசிங்கம் | ஒட்டுசுட்டான் | வீரவேங்கை | 16-6-90 | ,, ,, ,, ,, | ,, |
| 24. | உஷா | இ. வனிதாம்பிகை | முள்ளியவளை | கப்டன் | 11-7-90 | கொக்காவில் முகாம் தாக்குதல் | ,, |
| 25. | றஞ்சன் | பெ. சண்முகநாதன் | புளியங்குளம் | வீரவேங்கை | 15-6-90 | ,, ,, ,, | ,, |
| 26. | கபில் | சு. முருகேந்திரன் | உடையார்கட்டு | வீரவேங்கை | 17-7-90 | ,, ,, ,, | ,, |
| 27. | மருது | இ. சாந்தகுமார் | புதுக்குடியிருப்பு | வீரவேங்கை | 11-7-90 | கொக்காவில் தாக்குதல் | ,, |
| 28. | மார்க்கிரட் | க. கிருஸ்ணகுமார் | - | வீரவேங்கை | 07-7-90 | மாங்குளத்தில் தாக்குதல் | ,, |
| 29. | சிங்கன் | – | புதுக்குடியிருப்பு | மேஜர் | 15-6-90 | மாங்குளத்தில் துப்பாக்கிச்சூடு | ,, |
| 30. | தேவன் | - | ஒதியமலை | மேஜர் | 15-6-90 | வசாவிளானில் தாக்குதல் | ,, |
| 31. | லோலோ | - | கொக்குத்தொடுவாய் | 2ஆம் லெப்டினன் | 22-6-90 | மாங்குளத்தில் தாக்குதல் | ,, |
| 32. | அரி | - | செம்மலை | வீரவேங்கை | 15-6-90 | தண். சயனைட் அருந்தியமை | ,, |
| 33. | ராஜி | - | மாதுரு, ஒட்டுசுட்டான் | வீரவேங்கை | 15-6-90 | மாங். இராணுவ தாக்குதல் | ,, |
| 34. | வினோத் | - | கொக்காவில் | வீரவேங்கை | 11-7-90 | கொக்காவில முகாம் தாக்குதல் | ,, |
| 35. | குண | ந. இராஜசுபேந்திரன் | இராமநாதபுரம் கல்மடுநகர் | வீரவேங்கை | 14-06-90 | ஆனையிறவு ஷெல்தாக்குதல் | கிளிநொச்சி |
| 36. | செந்தூரன் | பா. முத்துசாமி | சிவநகர் உருத்திரபுரம் | ,, | 16-06-90 | மாங்குளம் முகாம் தாக்குதல் | ,, |
| 37. | ஜமுனன் | க. ரத்தினகுமார் | உருத்திரபுரம் | ,, | ,, | ,, | ,, |
| 38. | அரி | ஆ. மோகனதாஸ் | ஸ்கந்தபுரம் | ,, | ,, | ,, | ,, |
| 39. | ரகு | அ. மகேந்திரன் | ,, | ,, | ,, | ,, | ,, |
| 40. | சர்வா | சு. புவனேஸ்வரன் | யோகபுரம் | ,, | ,, | ,, | ,, |
| 41. | தினேஸ் | யோ. பிரபாகரன் | உயிலங்குளம் துணுக்காய் | ,, | ,, | ,, | ,, |
| 42. | சுஜாத் | ந. குமரகுருநாதன் | பாண்டியக்குளம் | ,, | ,, | ,, | ,, |
| 43. | முகமட் | ஐ. குமாரதாஸ் | வட்டக்கச்சி | ,, | ,, | ,, | ,, |
| 44. | காசிம் | சு. பாஸ்கரன் | பாரதிபுரம் கிழக்கு | ,, | , | மாங்குளம் முகாமில் ஹெலிதாக்குதல் | ,, |
| 45. | ஜமால் | சோ. தர்மராசா | புதுமுறிப்பு | ,, | , | மாங்குள முகாம் தாக்குதல் | ,, |
| 46. | சிறி | க. ஆனந்தராசா | உருத்திரபுரம் | ,, | ,, | மாங்குளம் ராணுவத்துடன் நேரடிமோதல் | ,, |
| 47. | வேங்கை | ஆ. மயில்வாகனம் | அம்பாள்குளம் | ,, | 22-06-90 | மாங்குளம் முகாமில் பொம்மர் தாக்குதல் | ,, |
| 48. | தாஸ் | அ. சந்திரமோகன் | மாங்குளம் | ,, | 25-06-90 | கொக்காவிலில் ஹெலி தாக்குல் | ,, |
| 49. | சங்கர் | செ. சந்திரகுமார் | கோணாவில் | ,, | 26-06-90 | — | ,, |
| 50. | மாவி | பா. பரமநாதன் | வவுனிக்குளம் | ,, | 10-07-90 | கொக்காவில் இராணும | ,, |



## அங்கே பறக்குது புலிக்கொடி!

அவனது கனவு இறுதியானது...
அவனது தாகம் உறுதியானது ..
தீக்கனல் பொழிந்து
சிவந்த பூமியில்
தீயோர் கனவு
பொடிப் பொடியானது!

எஞ்சிய அடிமைச் சின்னமாம்
கோட்டை
எதிரிகள் பாசறை ஆனதக்
கோட்டை ..
வெஞ்சின வேங்கைகள்
விடுத்த கணைகளால்
அஞ்சிப் பறந்தனர்
அந்நியக் கூலிகள்...

அவனது கனவு இறுதியானது
அவனது தாகம் உறுதியானது
எங்கள் மண்ணின்
இனிய சுதந்திரம்
எங்களுக் கானதே
எங்களுக் கானதே...
இங்கெவர் எம்மை
அடிமை கொள்வது?
பொங்கிடும் வேங்கை
புயலின் எழுச்சியில்
கோட்டை அதிர்ந்திட புலிக்
கொடியும் உயர்ந்திட
அவனது கனவு இறுதியானது
அவனது தாகம் உறுதியானது!


### வரிவிளம்பரம்

**இடம் மாற்றம்**

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 44 கஸ்தூரியார் வீதியிலிருந்து இல: 12 பொன்னையா லேன், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உபதபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B/1370)

**போட்டோஸ்ரட்**

போட்டோஸ்ரட் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள கிளீன்கட் 37, சிவகுருநாதர் லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். வேலை நேரம் 10 மணிக்கும் 3 மணிக்கும்இடையில் (R-645)


## ஷெல்லினால் ஒருவர் காயம்

(ஆனைக்கோட்டை)

மண்டைதீவுப்பகுதியில் இருந்து நேற்று ஏவப்பட்ட ஷெல் ஆனைக் கோட்டை பகுதியில் விழுந்து வெடித்ததில் ஜசிந்தா வயது (25) காயமடைந்தார்.

## சொந்த மண்

(யாழ்ப்பாணம்)

'இந்த மண் எங்களின் சொந்த மண்' என்ற புரட்சி கீதம் இன்று கைப்பற்றப்பட்ட கோட்டைக்குள் முதன் முதலாகஒலிபரப்பட்டுள்ளது.

கோட்டையின் மதில் சுவர்களிலும் மரங்களிலும் இன்று காலை ஒன்பது மணியளவில் ஒலிபெருக்கிகள் இணைக்கப்பட்டன இதனை தொடர்ந்து புரட்சி கீதங்கள் ஒலித்தவண்ணம் உள்ளது. (லோ)

## காசோலை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 37. | ஜமுனன் | க. ரத்தினகுமார் | உருத்திரபுரம் | ,, | ,, | ,, | ,, |
| 38. | அரி | ஆ. மோகனதாஸ் | ஸ்கந்தபுரம் | ,, | ,, | ,, | ,, |
| 39. | ரகு | அ. மகேந்திரன் | ,, | ,, | ,, | ,, | ,, |
| 40. | சர்வா | சு. புவனேஸ்வரன் | யோகபுரம் | ,, | ,, | ,, | ,, |
| 41. | தினேஸ் | யோ. பிரபாகரன் | உயிலங்குளம் துணுக்காய் | ,, | ,, | ,, | ,, |
| 42. | சுஜாத் | ந. குமரகுருநாதன் | பாண்டியக்குளம் | ,, | ,, | ,, | ,, |
| 43. | முகமட் | ஐ. குமாரதாஸ் | வட்டக்கச்சி | ,, | ,, | ,, | ,, |
| 44. | காசிம் | சு. பாஸ்கரன் | பாரதிபுரம் கிழக்கு | ,, | ,, | மாங்குளம் முகாமில் ஹெலிதாக்குதல் | ,, |
| 45. | ஜமால் | சோ. தர்மராசா | புதுமுறிப்பு | ,, | ,, | மாங்குள முகாம் தாக்குதல் | ,, |
| 46. | சிறி | க. ஆனந்தராசா | உருத்திரபுரம் | ,, | ,, | மாங்குளம் ராணுவத்துடன் நேரடிமோதல் | ,, |
| 47. | வேங்கை | ஆ. மயில்வாகனம் | அம்பாள்குளம் | ,, | 22-06-90 | மாங்குளம் முகாமில் பொம்மர் தாக்குதல் | ,, |
| 48. | தாஸ் | அ. சந்திரமோகன் | மாங்குளம் | ,, | 25-06-90 | கொக்காவிலில் ஹெலி தாக்குல் | ,, |
| 49. | சங்கர் | செ. சந்திரகுமார் | கோணாவில் | ,, | 26-06-90 | — | ,, |
| 50. | மாவி | பா. பரமநாதன் | வவுனிக்குளம் | ,, | 10-07-90 | கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதல் | ,, |
| 51. | நியூட்டன் | பெ. புஸ்பராசா | இந்திரபுரம் | லெப்ரினன்ட் | 11-07-90 | கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதல் | ,, |
| 52. | நிலானி | நா. மகேஸ்வரன் | வட்டக்கச்சி | வீரவேங்கை | 11-07-90 | கொ. இ. முகாம் தாக்குதல் | ,, |
| 53. | மில்டர் | கி. தேவகுமார் | ஸ்கந்தபுரம் | ,, | 12-07-90 | தள்ளாடி, மன்னார் | ,, |
| 54. | பாரதி | செ. அத்தனி | கட்டைக்காடு | ,, | 12-07-90 | ம. இ. முகாம் தாக்குதல் | ,, |
| 55. | கமீத் | மு. சண்முகராசா | தென்னியன்குளம் துணுக்காய் | ,, | 12-07-90 | கொக்காவில் முகாம் தாக்கல் | ,, |
| 56. | கீர்த்தி | ப. ஸ்ரீதரன் | திருவையாறு | ,, | 17-07-90 | ஆ. இராணுவத்துடன் மோதல் | ,, |
| 57. | குகன் | சு. செல்வேஸ்வரன் | புளியம் பொக்கணை | ,, | 18-07-90 | பொம்மர் தாக்குதல் பரந்தன் | ,, |
| 58. | பேகன் | ச. மனோகரன் | குமரபுரம் பரந்தன் | ,, | 19-07-90 | குறிஞ்சாத்தீவு மோதல் | ,, |
| 59. | சவுந்தலன் | சி. நாகராசா | நாகேந்திரபுரம் புளியம்பொக் - கணை | ,, | 19-07-90 | ஆனையிறவு மோதல் | ,, |
| 60. | கானகன் | க. சதீஸ்குமார் | உருத்திரபுரம் | ,, | 21-07-90 | குறிஞ்சாத்தீவு மோதல் | ,, |
| 61. | ஜெனனன் | தி. ஜெயந்திரன் | குஞ்சுப்பரந்தன் பரந்தன் | ,, | 02-08-90 | பரந்தன் மோதல் | ,, |
| 62. | சிவன் | தி. குகனேசன் | உருத்திரபுரம் | ,, | 02-08-90 | பரந்தன் மோதல் | ,, |
| 63. | ரஸ்வான் | க. ரவீந்திரன் | கரும்பட்டை முறிப்பு | ,, | 03-08-90 | பரந்தன் நேரடி மோதல் | ,, |
| 64. | நெல்சன் | இ. கெங்காதரன் | ஜெயந்திநகர் | ,, | 05-08-90 | யாழ். கோட்டை மோதல் | ,, |
| 65. | சதீஸ் | நா. விக்னேஸ்வரன் | பன்னக்கண்டி | ,, | 12-08-90 | ஆனையிறவு ஷெல்தாக்குதல் | ,, |
| 66. | சேவியர் | ஐ. ரட்ணபாலசிங்கம் | வட்டக்கச்சி | ,, | 20-08-90 | கொம்படி ஹெலி தாக்குதல் | ,, |

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 44 கஸ்தூரியார் வீதியிலிருந்து இல: 12 பொன்னையா லேன், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B/1370)

## போட்டோஸ்ரட்

போட்டோஸ்ரட் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள கிளீன்கட் 37, சிவகுருநாதர் லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். வேலை நேரம் 10 மணிக்கும் 3 மணிக்கும்இடையில் (R-645)

## லண்டன் பரீட்சை

யாழ். டியூட்டோரியல் கல்லூரியில் (J. T C) லண்டன் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் 29 - 9 - 90 அன்று காலை 9.00 - 11.00 இடைக்கிடையில் காரியாலயத்திற்கு தவறாது சமுகமளிக்கவும்.

இல. 341, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

(R/665)

## ஈரான் கண்டனம்

(தெகிரான்)

வளைகுடாப் பகுதியில் வெளிநாட்டுப் படை அதிகரித்து வருவது குறித்து ஈரான் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

ந்து நேற்று ஏவப்பட்ட ஷெல் ஆனைக் கோட்டை பகுதியில் விழுந்து வெடித்ததில் ஜசிந்தா வயது (25) காயமடைந்தார்.

## சொந்த மண்

(யாழ்ப்பாணம்)

'இந்த மண் எங்களின் சொந்த மண்' என்ற புரட்சி கீதம் இன்று கைப்பற்றப்பட்ட கோட்டைக்குள் முதன் முதலாகஒலிபரப்பட்டுள்ளது.

கோட்டையின் மதில் சுவர்களிலும் மரங்களிலும் இன்று காலை ஒன்பது மணியளவில் ஒலிபெருக்கிகள் இணைக்கப்பட்டன இதனை தொடர்ந்து புரட்சி கீதங்கள் ஒலித்தவண்ணம் உள்ளது. (லோ)

## காசோலை புத்தகத்திற்கு தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் உள்ள ஊரடங்கு சட்டத்தாலும், வங்கிகள் இயங்காமையாலும் காசோலைப் புத்தகத்திற்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் லங்கா சீமெந்து லிமிட்டெட் நிறுவன ஊழியர்களுக்கும், மற்றும் சில அலுவலக ஊழியர்களுக்கும் சம்பளக் காசோலையை வழங்க முடியாத நிலையில் ஊழியர்கள் கஷ்டப்படுகின்றார்கள். (24)

### தாழ்த்தப்பட்ட மக்களுக்கான

# இந்தியாவில் இடஒதுக்கீட்டிற்கு எதிரான ஆர்ப்பாட்டம் வலுவடைகின்றது

(டில்லி)

மண்டலகமிஷன் அறிக்கைப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்யும் வி. பி. சிங் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு வட இந்திய மாநிலங்களில் எதிர்ப்புக்கள் வலுவடைந்து வருகின்றன.

டிலலியில்மாணவர்கள் இந்த இட ஒதுக்கீட்டை எதிரத்து தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் டில்லியில் ஒரு மாணவர் தீக்குளித்ததைத் தொடர்ந்து வலுவடைந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலிசார் முதலில் கண்ணீர் பிரயோகம், ரப்பர் குண்டுகளும் பாவித்தனர். ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்வதோடு கடைகளுக்கும், பஸ்களுக்கும் தீவைத்தனர். இதைத் தொடர்ந்து பொலிசார் சுட்டதில் மூன்று மாணவர்கள் கொல்லப்பட்டார்கள். நால்வர் காயமடைந்தனர்.

அதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி பிரதமர் வி. பி. சிங் ஜனதாதள கட்சித்தலைவர் எஸ் ஆர் பொம்மையைக் கேட்டுள்ளார்.

# போர் நிலத்திலே புனிதத்தாய்

(அச்சுவேலி)

போர்நிலத்திலேபுனிததாய் சிந்துநடைமேடைக்கூத்துஅரங்கேற்ற விழா 20ம் திகதிஅச்சுவேலி சிவசத்தி கோயில் வீதியில் நடைபெற்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கலை கலாச்சாரப் பிரிவின் சார்பில் திரு. சி. விவேகானந்தன் (மாமா) எழுதித் தயாரித்துமேடையேற்றினார்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றையும் அதன் பின்னணியில் இந்தியா, மற்றும் உலகநாடுகளின் செயற்பாட்டையும் எடுத்துக்காட்டி நிச்சயம்தமிழ் ஈழம் மலரும் என்பதை புலப்படுத்தும் ''போர் நிலத்திலே புனிதத்தாய்,,சிந்து நடைக் கூத்தை பெரும் திரளான மக்கள் கண்டுகளித்து பாராட்டினர்.

நவீன நாரதர் (வீணைக்குப் பதில் யந்திரத்துப்பாக்கியுடன்) தமிழ் ஈழ மாதா, இந்திய மாதா, உலக மாதா, தூதர் பரிவாரங்களுடன் இயமன், இலங்கை இராணுவம்: தலையாட்டும் தமிழ்க் குழுக்கள்: புத்தபிரான் போன்ற கதாபாத்திரங்கள் மூலம் தமிழ் ஈழத்தின் தற்போதைய நிலையும் புலிகளின் புனிதப் போராட்டமும் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டது.

# பயிற்சி ஆசிரியர்களுக்கு இரண்டுமாத சம்பளமில்லை

(யாழ்ப்பாணம்)

பேராதனை, நீர்கொழும்பு போலவலான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெறும் யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படாததால் இவர்கள் பெரும் கஷ்டப்பட்டு வருகின்றார்கள்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுவரும் இவ்வேளையில் இவர்களுக்கு மட்டும் சம்பளம் வழங்கப்படவில்லை என சம்பந்தப்பட்டவர்கள் கவலைப்படுகின்றனர்.

மேற்படி பயிற்சிக்கலாசாலைகளில் பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்கள்இரண்டாம் தவணை விடுமுறையின்போது யாழ். மாவட்டத்திற்கு வந்தவர்கள் திரும்பிச் செல்ல முடியாது கஷ்டப்படுகின்றனர்.

மேற்படி ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் 05 - 09 - 90 மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதும் யாழ். மாவட்டத்திலிருந்து மேற்படி மாவட்டங்களுக்குச் செல்ல வாகனவசதி இல்லாததாலும், கடந்த இரண்டு மாதங்களாகச் சம்பளம் கிடைக்காததாலும் இந்த ஆசிரியர்கள் திரும்பிச் செல்ல முடியாதுஅல்லல்படுகின்றனர்

சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம்செலுத்திபயிற்சி ஆசிரியர்களை மீண்டும் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க ஆவன செய்ய வேண்டும். (49)

## மக்கள் கஷ்டம்

(கொழும்புத்துறை)

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவுப் பகுதியில் வாழும் மக்களுக்கு உணவு, மருந்து, எரிபொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்கள் இல்லாது பலத்த கஷ்டத்தின் மத்தியில் வாழுகின்றனர்.

இப்பகுதிக்கு படகுச்சேவைகள் நடைபெறாததால் இப்பொருட்கள் கிடைக்கவில்லை.

## 6-ம் மாத அந்தியேட்டி அழைப்பு

சிவலிங்கராசா சிவதர்சினி

பிறப்பு:
06-05-1974

இறப்பு:
27-04-1990



ஓ .. மகளே
நீ....
சிரிக்கத் தெரிந்த
செந்தாமரை
உன் சாவில் கூட
சந்தோஷச் சிரிப்பு

உன் பிரிவால் வாடும்!

நல்லையா சிவலிங்கராசா,
சங்கக்கடை,
நாவற்குழி.

குடும்பத்தினர்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

(B-1428)

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 27-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ எண் 05

*நேற்றிரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிதீவிரதாக்குதலைஅடுத்து கோட்டைஇராணுவமுகாமில் இதுவரைகாலமும் நிலை கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாரிய இழப்புக்களுடன் கோட்டையில் தமது இருப்பினை இழந்தவராய் வெளியேறினர்.*

*யாழ். கோட்டை முகாமின் நிலைகுறித்து சரியாக ஒரு மாதத்திற்கு முன்னர் எமது ஆசிரியர் தலையங்கம் ஒன்றில் எழுதிய வாசகங்கள்இன்று நிதர்சனமாகியுள்ளது.*

*'அழிந்தால் சரி' என்ற அந்த ஆசிரிய தலையங்கம் ஒருமாதம் கழித்து இன்று உங்களுக்கு ஞாபகப்படுத்தும் முகமாக மீண்டும் பிரசுரிக்கிறோம்.*

## அழிந்தால் சரி

யாழ். கோட்டை, இதுவே இன்று விடுதலைப் புலிகளினதும் சிறிலங்கா இராணுவத்தினதும் போராட்ட மையமாக இருக்கின்றது.

ஒரு கோட்டையின் பலம் அதற்குள் இருக்கும் படையினரின் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல. அதன் அமைவிடமும், அமைப்புமே அதன் பலமாகும். யாழ். கோட்டையும அதையே தெளிவுபடுத்தி நிற்கிறது. இல்லையேல் விடுதலைப்புலிகளிடம் இம முகாம் போர் ஆரம்பித்த சில நாட்களிலேயே வீழ்ச்சி அடைந்திருக்கும் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையில் கோட்டை சம்பந்தமாக இடம்பெறும் போர் இருவருக்குமான கௌரவப் பிரச்சினையுடன் சம்பந்தப் பட்டதாகப் பலர் கருத்து வெளியிட்டுள்ளதோடு, அதைப் பல வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களும் வெளியிட்டு உள்ளன. ஆனால் உண்மைநிலை அவ்வாறு இல்லை. யாழ். கோட்டை இன்று தமிழ் மக்களின் பாதுகாப்புடனும் பொருளாதாரத்துடனும் நேரடியாகத்தொடர்புபட்டுள்ளது.

யாழ். கோட்டையைச் சூழ்ந்தே இன்று யாழ்.நகரம் விருத்தியடைந்துள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் இப்பகுதியில் வாழ்கின்றார்கள் யாழ் குடாநாட்டின் நிர்வாக சேவை மையமாகவும் இந்த நகரமே விளங்கி வருகின்றது அத்தோடு யாழ். குடாநாட்டுப் பகுதியின் சகல பாகமும், தீவுப்பகுதியும் நகரத்துடன் வீதிப் போக்குவரத்துப் பாதைகள்ஊடாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலான நகரத்தின்மூலையில் அமைந்துள்ள இந்த இராணுவமுகாம் எவ்வாறு முக்கியத்துவம் அற்றதாக இருக்க முடியும்.

அதேவேளை தமிழீழ அழிப்பையே தனது குறிக்கோளாக கொண்டுள்ளதால் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையமே.

இன அழிப்பிற்கு வாய்ப்பாக நெரிசலான சனத் தொகையை கொண்டதும் பொருளாதார நிலைகளைக் கொண்டதும் மக்களின் அன்றாட தேவையுடன் நெருங்கிய தொடர்புடைய ஆஸ்பத்திரி, வர்த்தக நிலையங்களை கொண்டதுமான யாழ். கோட்டையை இழப்பதன் மூலம் எஞ்சியுள்ள தனது ஆதிக்கத்தை கைவிடுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் எவ்வாறு ஒத்துக்கொள்ளும் (சிறிலங்கா அரசைப் பொறுத்து யாழ். கோட்டை இராணுவமுகாமை இழப்பதென்பது தமிழருக்கு ஒரு தலைநகரை விட்டுக் கொடுப்பது போல் அல்லவா ஆகும்.

இந்த நிலையில் கோட்டை முகாம் சிறிலங்காவுக்கு கேந்திர முக்கியத்துவம் அற்றது எனக் கூறுவது எவ்வாறு பொருந்தும்.

# திருமலை தந்த வேங்கை

திருக்கோணமலை

— எழில் கொஞ்சும் தமிழரின் பாரம்பரியப் பிரதேசம். சிங்கள இனவாதப்பேய்களின் அடாவடித்தனங்களால் அடிக்கடி குருதிப் புனலாடிய தமிழ் மக்களின் கண்ணீரின் உப்பால் கடல் உப்புக் கரிக்கும் பிரதேசம்.

— நமது தாயகத்தினை மீட்டு சுதந்திர தமிழீழத்தை அமைக்கும் போராட்டத்தில் வீரம்மிக் வேங்கைகள் பலரை தந்த தனித்துவமிக்க பூமி

— சார்ல்ஸ் அன்ரன், லெப். கேணல், புலேந்திரன்... போன்ற தியாக வேங்கைகளின் வரிசை தொடர்ந்து கொண்டிருக்கும் மண்...

— இதே மண் தந்த மற்றுமோர் வேங்கை உப்புவெளியைச் சேர்ந்த மேஜர் சுரேந்திரன்.

0 0 0 0

— *11-10-1962* அன்று உப்புவெளியில் ஏழைக்குடும்பம் ஒன்றில் ஒரே மகனாகப் பிறந்தவன் சுரேந்திரன்.

— உணர்வுபூர்வமாகப் பிரச்சினைகளை அணுகும் வயதில் திருமலையின் அவலங்கள் அவனது மகனை வெகுவாகப் பாதித்தது. பேரினவாதத்தின் கொடுமைகள் அடிக்கடி திருமலையைச் சின்னாபின்னப்படுத்திய போது அவன் சிலிர்த்துக் கொண்டான்.

— அடிமனதில் கனலும் உணர்வுகள், கண்களில் எரிகரம், தாய் மண்ணின் அவலங்களைத் தகர்த்து அதன் இறைமையையும், உரிமையையும் வென்றெடுக்கும் ஆர்வம் இவைகளுடன் அவன் விடுதலைப் புலிகளின் பாசறையின் முதலாம் பயிற்சிப் பிரிவில் 1983ஆம் ஆண்டில் தன்னையும் ஒரு போராளியாக இணைத்துக் கொண்டான்.

0 0 0 0

— களத்தில் இவனது சாதனைகள், எதிரிக்கு எதிரான தாக்குதல்கள் பல இவனது வீரத்தினை வரலாறாய் பறைசாற்றி நிற்கும்.

— 1985ஆம் ஆண்டில் பொலிகண்டியில் சிறிலங்கா கடற்படை மீதான தாக்குதல். 'இதுவே கடற்படை மீதான முதற் தாக்குதல் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்) கொக்குளாய் இராணுவ முகாம் மீதான பாரிய தாக்குதல், திருமலை 6 ஆம் கட்டையில் மேற்கொண்ட பொலிஸ் ஜீப் மீதான தாக்குதல், குச்சவெளி பொலிஸ் நிலையத் தகர்ப்பு, கடற்படை முகாம் தாக்குதல், பன்மதவாச்சி இராணுவ முகாம் மீதான தாக்குதல்... என்று மேஜர் சுரேந்திரனின் போர் ஆற்றல் பரிணமித்த களங்கள் பல... மேற்குறிப்பிட்ட தாக்குதல்களின் போது இவனது

## மேஜர் சுரேந்திரன்



படையை முன்னின்று நெறிப்படுத்தும் ஆற்றலே வெற்றிக்கு வழிகோலியவை...

0 0 0 0

— இந்த மண்ணை ஆக்கிரமித்து, எமது மண்ணை அடிமைகொள்ள நினைத்து அவமானத்தை மட்டுமே தழுவிக்கொண்ட இந்திய இராணுவத்தினரின் மீதான இறுதித தாக்குதல் மறக்கமுடியாத் ஒன்றாகும்.

— *26 - 09 - 1988.*

— தியாக தீபம் திலீபனின் முதலாவது ஆண்டு நினைவு நாள்.

— அன்று அந்த தியாகியின் நினைவுக் காணிக்கையாக நிகழ்ந்தது அந்த இந்தியப் படைக்கெதிராக சலப்பை ஆற்று பாலத்தருகில் நிகழ்ந்த மோதல்.

— வெற்றிகரமாக நடந்த அந்தத் தாக்குதலில் 4 ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் கொல்லப்பட்டு, ஒரு SMG. ஒரு SLR, ஒரு கண்ணிவெடி கண்டுபிடிக்கும் கருவி ஆகியன கைப்பற்றப்பட்டன.

— தியாகதிலீபம் அணைந்த அதே நாளில், அவனுக்கு இந்தியா இழைத்த கொடுமைக்குப் பதிலடியாக விடுதலைப் புலிகளின் ஆற்றலை புலப்படுத்தி அறிவுபுகட்டும் வகையில் மேற்கொண்ட இத் தாக்குதலின் போது சாதனை புரிந்தபடியே சரித்திரமாகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட மேஜர் சுரேநதிரன் திலீபனுடன் தன்னை இணைத்துக் கொண்டான்.

— தோற்றத்தில் ''சிங்களவரைப்'' போன்று இருந்ததால் தனது நண்பர்களால் 'சிங்களவன்'' என்றே செல்லமாக அழைக்கப்பட்டுவந்த மேஜர் சுரேந்திரனின் இடம் தமிழீழ விடுதலைப் போராட்டதில் நிரப்பமுடியாத ஒன்றே எனினும்...

*வீழ்ந்த வீரனின்*
*தாகமும் உறுதியும்...*
*சிந்திய குருதியில்*
*சிவந்த சீருடை*
*ஏந்திய ஆயுதம் —*
*இலட்சியப் பார்வை*
*அடுத்தடுத்தாயிரம்*
*வேங்கையில்*
*உயிர்த்தெழும்*
*மீண்டும் மீண்டும்*
*உரத்துப் பாடிடும்...*
*''எங்களின் தாயகம்*
*எங்களின் தாயகம்*
*என்றே இசைத்திடும்...''*

□

## பதவி வெற்றிடம்
## பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்,

*(1) லொறிச்சாரதி: 312/11*

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பப் படிவங்களைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

இப்பதவிகளுக்கான வயதெல்லை, தகைமைகள், வேதனம்பற்றிய விபரங்களை சங்கத் தலைமைஅலுவலகத்தில் பார்வையிட்டு அதன்பிரகாரம் உங்கள் விண்ணப்பங்களை நற்சான்றுப்பத்திரங்கள், வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம், பிறப்பத்தாட்சிப்பத்திரம், வதிவுத்தகமைச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம்/நேரில் 1990-10-10 ஆம் திகதிக்கு முன்பாக ''தலைவர், பருத்தித்துறை ப.நோ கூ. சங்கம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்கமேல்மூலையில் ''லொறிச்சாரதி பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
*(B/1427)* 1990-09-22

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 24- 8- 90 சனிக்கிழமை மாலை மண்டைதீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது மரணமான எமது அன்புச் செல்வங்கள் திருமதி மதுரராணி ஏகாம்பரம் (48 வயது) செல்வி .ஹேமநந்தினி ஏகாம்பரம் (8 வயது), செல்வி முத்துராணி நவரட்ணராஜா (28 வயது) (பயிலுநர் ஆசிரியை), அகால மரணமடைந்த அமரர் சி ஏகாம்பரம் (வயது 50,) செல்வி ஏ. துஷ்யந்தி (11 வயது) ஆகியோரின் மறைவு எம்மை ஆறாததுயரில் மூழ்கடித்து விட்டது மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது உங்கள் நினைவுகளா நெஞ்சங்கள் செலுத்துகின்ற கண்ணீர் அஞ்சலி இது.

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

திரு. மு. நவரட்ணராஜா
முன்னாள் கிராம அதிகாரி (மண்டைதீவு) குடும்பமும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள்.

மண்டைதீவு - 6.

*(B- 1431)*

# ஈராக் மீது ஐ. நா. பாதுகாப்புச்சபை விமானப் போக்குவரத்துத்தடை

ஈராக்மீது விமானப்போக்குவரத்துத்தடையைஐ நா.பாதுகாப்புச்சபை நேற்று விதித்தது. இவ் விமானப்போக்குவரத்துத்தடைக்கு பாதுகாப்புச் சபையில் உள்ள 14 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன. அதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தோடுஈராக்செல்லும் விமானங்கள் அண்டை நாட்டு விமானத் தளங்களில் இறக்கி பரிசோதனைக்கும் உட்படுத்தப்படவுள்ளன. ஈராக் வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

## சவுதி வெளிநாட்டமைச்சர் கெய்ரோ விஜயம்

(கெய்ரோ)

வளைகுடாப் பிரச்சினை தொடர்பாகபேச்சுவார்த்தை நடத்துவதற்காக சவுதியின் வெளியுறவு அமைச்சரான இளவரசர் கெய்ரோ சென்றுள்ளார். இவர் நேற்று முன்தினம் எகிப்தில் அதிபர் சதாம் உசைன்உடன்பேச்சுவார்த்தை நடத்தினார்.



## திலீபா

வருகின்றது அத்தோடு யாழ். குடாநாட்டுப் பகுதியின் சகல பாகமும், தீவுப்பகுதியும் நகரத்துடன் வீதிப் போக்குவரத்துப் பாதைகள்ஊடாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலான நகரத்தின்மூலையில் அமைந்துள்ள இந்த இராணுவமுகாம் எவ்வாறு முக்கியத்துவம் அற்றதாக இருக்க முடியும்.

அதேவேளை தமிழீழ அழிப்பையே தனது குறிக்கோளாக கொண்டுள்ளதால் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையமே.

இன அழிப்பிற்கு வாய்ப்பாக நெரிசலான சனத் தொகையை கொண்டதும் பொருளாதார நிலைகளைக் கொண்டதும் மக்களின் அன்றாட தேவையுடன் நெருங்கிய தொடர்புடைய ஆஸ்பத்திரி, வர்த்தக நிலையங்களை கொண்டதுமான யாழ். கோட்டையை இழப்பதன் மூலம் எஞ்சியுள்ள தனது ஆதிக்கத்தை கைவிடுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் எவ்வாறு ஒத்துக்கொள்ளும் (சிறிலங்கா அரசைப் பொறுத்து யாழ். கோட்டை இராணுவமுகாமை இழப்பதென்பது தமிழருக்கு ஒரு தலைநகரை விட்டுக் கொடுப்பது போல் அல்லவா ஆகும்.

இந்த நிலையில் கோட்டை முகாம் சிறிலங்காவுக்கு கேந்திர முக்கியத்துவம் அற்றது எனக் கூறுவது எவ்வாறு பொருந்தும்.

கோட்டை முக்கியமற்றதாகில் சர்வதேச வரன் முறைகளுக்கு மாறாக யாழ். போதனாவைத்தியசாலையுடன் கோட்டை இராணுவ முகாமை சம்பந்தப்படுத்தி கேவலமான ஒரு பேரம் பேசுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் ஏன்முனைய வேண்டும்.

இந்நிலையில் கோட்டை இராணுவமுகாம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டாலும் சரி, சிறிலங்கா இராணுவம் கோட்டையில் இருந்து வெளியேறினாலும் சரி, தமிழ் மக்களை பொறுத்தவரை அது வெற்றியே அதாவது கோட்டை இராணுவமுகாம் அதிகாரத்தின் எச்சமாக யாழ். நகரின் மூலையில் அமைந்திருப்பது என்றும் தமிழ் மக்களுக்கு ஒரு அருவருக்கத்தக்க விடயமாகவே இருக்கும்.

இணைத்துக் ...

0000

— களத்தில் இவனது சாதனைகள், எதிரிக்கு எதிரான தாக்குதல்கள் பல இவனது வீரத்திலை வரலாறாய் பறைசாற்றி நிற்கும்.

— 1985ஆம் ஆண்டில் பொலிகண்டியில் சிறிலங்கா

... அவமானத்தை மட்டுமே தழுவிக்கொண்ட இந்திய இராணுவத்தினரின் மீதான இறுதித தாக்குதல் மறக்கமுடியாத் ஒன்றாகும்.

— 26 - 09 - 1988.

— தியாக தீபம் திலீபனின்

மீண்டும் மீண்டும்
உரத்துப் பாடிடும்...
''எங்களின் தாயகம்
எங்களின் தாயகம்
என்றே இசைத்திடும்...'' □

சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள்.

மண்டைதீவு - 6.

(B- 1431)

# ஈராக் மீது ஐ. நா. பாதுகாப்புச்சபை விமானப் போக்குவரத்துத்தடை

ஈராக்மீது விமானப்போக்குவரத்துத்தடையைஐ நா. பாதுகாப்புச்சபை நேற்று விதித்தது. இவ் விமானப்போக்குவரத்துத்தடைக்கு பாதுகாப்புச் சபையில் உள்ள 14 நாடுகள் ஆதரவாகவும், ஒரு நாடு எதிராகவும் வாக்களித்தது. எதிராக வாக்களித்த நாடு கியூபா ஆகும்.

இவ்விமானத் தடையின் மூலம் ஐ நா. சபை அத்தியாவசிய தேவைகள் எனக்கருதும் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் யாவும் விமானம் மூலம் ஈராக்கிற்குக் கொண்டு செல்வதற்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடையின் மூலம் வெளிநாட்டு விமானங்கள் பொருட்களை ஏற்றிக் கொண்டு ஈராக்கிற்கு செல்வதற்கும் ஈராக்கிய விமானங்கள் வெளிநாடுகளில் பொருட்களுடன் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தோடுஈராக்செல்லும் விமானங்கள் அண்டைநாட்டு விமானத்தளங்களில் இறக்கி பரிசோதனைக்கும் உட்படுத்தப்படவுள்ளன.

அதேவேளை ஐ. நா. சபை கூட்டத்தில் தான் கலந்து கொள்வதாயின் ஈராக் விமானத்திலேயே வருவேன் என்றும், அல்லது ஐ நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை எனவும் ஈராக் வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

## நடவடிக்கை

51 ஆவது சரத்தின்படி ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு ஐ. நா. வுக்கு அதிகாரம் உண்டு என பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக் கிரட்தட்சரும், ரஷ்ய வெளியுறவு அமைச்சர் எட்வேட் செவர் நாட்சேயும் தெரிவித்துள்ளனர்.

# சவுதி வெளிநாட்டமைச்சர் கெய்ரோ விஜயம்

(கெய்ரோ)

வளைகுடாப் பிரச்சினை தொடர்பாகபேச்சுவார்த்தை நடத்துவதற்காக சவுதியின் வெளியுறவு அமைச்சரான இளவரசர் கெய்ரோ சென்றுள்ளார். இவர் நேற்று முன் தினம் எகிப்தில் அதிபர் சதாம் உசைன்உடன்பேச்சுவார்த்தை நடத்தினார்.

# மண்ணெண்ணையில் கலப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் தெரு ஓரங்களில் குறைந்த விலையில் தற்போது விற்பனையாகும் மண்ணெண்ணெய் கலப்படம் செய்யப்பட்டது எனத் தெரிகிறது.

தேங்காய் எண்ணெய் குறைந்த விலையில் கிடைப்பதாலும் மண்ணெண்ணையுடன் ஒப்பிடும்போது அடர்த்தி வித்தியாசம் குறைவு என்பதாலும் இவை இரண்டையும் கலப்பதற்கு சாத்தியம் உண்டு. இப்படிக்கலப்படம் செய்யப்பட்ட மண்ணெண்ணெயினால் நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடையும், விளக்கு பிரகாசமாக எரிவதில்லை. எனவே பாவனையாளர்கள் அவதானமாக இருக்கவும். (க)

# 2,000 யேமன் நாட்டவர் சவுதியில் இருந்து வெளியேற்றம்

(ரியால்)

சவுதி அரேபியாவில் இருந்து இரண்டாயிரம் யேமன் நாட்டவர்வெளியேற்றப்பட்டனர். ஈராக்கிற்கு யேமன் நாடு ஆதரவு அளிப்பதைத் தொடர்ந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

வெளியேற்றப்பட்டவர்களை வாகனங்களில் செல்லவிடாது கால்நடையாகவே சவுதி அரேபியாவில் இருந்து யேமனுக்கு செல்லுமாறு சவுதி பணித்துள்ளது.

அதேவேளை பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு எதிராவும் சவுதிப் பத்திரிகைகள் எழுதிவருகின்றன.



# திலீபா நீர் ஓர் போர்

## திலீபா!

நீர் ஆகாரம் மட்டுமா
அருந்தவில்லை
அடக்குமுறை திணிப்பினையும்
அரைகுறைத் தீர்வினையுமல்லவா,
மரணித்தது நீ அல்ல
மக்களின் மயக்கங்களும்
மாபாரதத்தின் மாயாஜாலங்களும்

ஓர் சாவு என்பது தேடிவரும்
ஆனால் நீயோ!
அதனையே தேடிச்சென்று
அனலிடை புழுவாய் நெளியும்
தமிழ் சாதியையே
சாதனைக்கு இழுப்பேன் என்று
சாவினையே சரித்திரமாக்கியவன்

போர் அது ஆயுதங்களினால் மட்டும்
புரிவதல்ல!
அசைக்கமுடியாத தியாகத்தினாலும்
புரியமுடியும் என
உலகிற்கு புரியவைத்தவன்
உண்மை எழுச்சிக்கு
வித்திட்டவன்

- பொன். பத்மநாதன்

ஜனனிமில்
உடுவில்.

B/1430

# பிராந்திய நாடுகளே பிரச்சினையை தீர்க்கவேண்டும்

## - அலி அக்பர் வலயாசி

வளைகுடா பிராந்தியத்தில் அமைதியும் பாதுகாப்பும் நிலவ வேண்டுமாயின் அது பற்றி அந்த பிராந்திய நாடுகளாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும் என ஈரானிய வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வலயாசி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நியூயோர்க் விஜயம் செய்த ரஷ்ய வெளியுறவு அமைச்சர் எட்வெட் செவர்னாத்சேயின் தலைமையில் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு நேற்று மாலை நடைபெற்றது. இம் மாநாட்டை முன்னிட்டு ஈரானிய வெளியுறவு அமைச்சர் இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கூட்டத்தில் உரையாற்றும் போது ஈராக்கிய படைகளின் குவைத் மீதான ஆக்கிரமிப்பு குறித்தும் வளைகுடா பிராந்தியத்தில் எழுந்துள்ள உலக வல்லரசுகளின் தலையீடுகள் குறித்தும் பேசினார்.

# திலீபனின் 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

நஞ்செனச் சொல்லி
நஞ்சு தந்த நரிப்படையால்
நம் ஈழத்தில்
நந்தவனங்கள் தீப்பிடித்தன
புரட்சிக்குப் புறப்பட்ட புனிதனே
உனது
பாதைகளில்
வேங்கைகளின் பயணங்கள்
தொடரும்! தொடரும்!!!

நாகர்கோயில் கிழக்கு சிற்றூரவை
நாகர்கோயில் மேற்கு சிற்றூரவை
நாகர்கோயில் தமிழீழ இணக்கமன்று

R/664

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# பெரும்இழப்புகளை இப்பொழுதுதான் சிறிலங்கா இராணுவம் சந்திக்கிறது

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசாங்கம் எப்பொழுதுமே கண்டிராத பாரிய இழப்புக்களை இப்போதுதான் கண்டுவருகிறது. அதனால் அரசு குழப்பம் அடைந்து செய்வதறியாது செயற்பட்டு வருகிறது.

சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

பல ஆயிரக் கணக்கில் கூடி நின்ற மக்கள் மத்தியில் திரு யோகி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

கடந்த 18 வருடங்களுக்கு முன்பே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தமிழீழம் ஒன்றுதான் வழி என்று கூறி அதற்காகப் போராட முற்பட்டவர் எமது தலைவர் பிரபாகரன். தான்கொண்ட இலட்சியத்திலுருந்துக்கரணம் அடியாது, இன்றும் அந்த இலட்சியத்திற்காகத் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருப்பவர் அவர். அதனால் விடுதலைப் புலிகள் மத்தியில் எந்தவித குழப்பமும் இல்லை.

இந்திய இராணுவத்துடனான மோதலின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்களை விட இப்போது எம்மத்தியில் கூடுதலான இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. போராளிகள் பெரும் கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டிருகிறார்கள். அப்படி இருந்தும் எம்மத்தியில் எந்தவித குழப்பமும் இருக்கவில்லை. கடந்த 3மாத காலங்களில்தான் கூடுதலான இழப்புக்களை நாம் கண்டுள்ளோம்.

எமது இழப்புக்களைவிட அரசாங்கத்திற்குத்தான் கூடுதலான இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் அரசாங்கம் குழப்பமடைந்து காணப்படுகிறது. படையினர் குழப்பமடைந்துள்ளனர்.

அரசாங்கம் தமிழ்மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையால் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அப்படி இருந்தும்கூட எமதுபோராட்டத்திற்கு மக்கள் ஆதரவு வழங்கிக்கொண்டே இருக்கிறார்கள்.

இன்று எம்மாவட்டத்தைப் பாதுகாக்கும் பணியில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த போராளிகளே கூடுதலாக ஈடுபட்டுள்ளனர். எம்மவர்கள் ஆதரவாளர்களாகவும், பார்வையாளராகவும் மட்டும் இருந்தால் போதாது. பங்காளிகளாகவும் மாறவேண்டும்.

கெரில்லா யுத்தமாக ஆரம்பிக்கப்பட்ட எமது போராட்டம் இன்று வளர்ச்சியடைந்து நேரடி யுத்தமாக மாறிவிட்டது என்றார்.

முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பரா, கே. செல்வநாயகம் ஆகியோரும் உரையாற்றினர்.

(49)

-யோகி

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் சமபளம் வழங்கலில் முறைகேடு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியரில் சிலருக்கு மட்டும் கடந்தவெள்ளியன்று சம்பளம் பணமாகப் பட்டுவாடா செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது. அன்றையதினம் பன்னிரண்டுமணி வரை வேலைக்குச் சமுகமளித்திருந்தவர்களில்கூட பலருக்கு சம்பளம் வழங்கப்படப் போகின்ற விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என அறியமுடிகின்றது. குறிப்பிட்டசிலருக்கு மட்டும் சூசகமாகத் தெரிவிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சுமார் இரண்டு லட்சம் ரூபா சம்பளப் பணமாக பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கின்றது.

மேலும் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டபோது திருப்திகரமான பதிலேதும் வழங்கப்படவில்லையென அறிய முடிகிறது. வங்கியிலிருந்து பெறப்பட்ட பணம் போதாது, பாதுகாப்பாகப் பணத்தை வைக்கவசதியில்லை என்பனபோன்ற அசிரத்தையான பதில்களால்ஊழியர்கள் மனம் குமுறிப் போயுள்ளனர். எதிர்வரும் வாரங்களிலாவது தமது சம்பளத்தை உரிய முறையில் பெற முடியுமா என ஊழியர்கள் கவலை கொண்டுள்ளனர்.



புலிகளின் தாக்குதலால் சிதறி ஓடிய ஸ்ரீலங்காப்படையினரின் ஆயுதங்களில் கைப்பற்றப்பட்ட ஒரு தொகுதி


# குனிந்த முகங்கள் நிமிர்ந்து சிரித்தன

(யாழ்ப்பாணம்)

கோட்டை இராணுவத்தினர் முகாமைவிட்டு ஓடிய செய்தி மக்களை எட்டியதும் அவர்கள் இனம் புரியாத சந்தோஷத்தில் திளைத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மக்கள் தமது இல்லங்களைவிட்டு வெளியே வந்து தெருக்களில் கூடிநின்று ஒருவருக்கொருவருடன் இராணுவம் ஓடிய செய்தியை அளவளாவிக் கொண்டிருந்தனர்.

மேலும் தெருக்கள் எங்கும் மக்கள் பட்டாசு வெடிகளைக் கொளுத்தி ஆரவாரம் செய்தும், புரட்சிப் பாடல்களைப் பாடியும் தமது மகிழ்ச்சிப் பெருக்கைவெளிப்படுத்தினார்கள். கவிஞர் காசி ஆனந்தனின் 'கூண்டுப்பறவை சிறகை விரிக்கும், குனிந்த முகங்கள் நிமிர்ந்து சிரிக்கும்' என்ற பாடல் வரிகள் மக்களின் சந்தோஷத்துடன் இணைந்திருந்தமையை அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது.

கோட்டை இராணுவத்தினர் தமது முகாமை விட்டு ஓடிய செய்தி யாழ். நகரமெங்கும் பரவியதும், கோட்டையை நோக்கி நகர மக்கள் படையெடுத்துச் சென்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது.



## திலீபனின்ஞாபகார்த்தமாக மரம் நாட்டு வைபவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மனோன் மணி சனசமூக நிலையத்தில் நேற்று திலீபனின் 3- ம் ஆண்டு நினைவுதின வைபவம் கொக்குவில் மத்தி கிழக்கு சிற்றூரவை உறுப்பினர் செ. இராசேந்திரம் தலைமையில்நடைபெற்றது

முற்பகல் 11. மணியளவில் ஆலய மணி ஒலிக்க, இதுவரை தமிழ் மண் மீட்புக்காக உயிர் நீத்த விடுதலைப் புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் 2 நிமிடங்கள் மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமாகியது மனோன்மணி சனசமூக நிலையத் தலைவர் திரு. இராசநாயகம் தலைமையில் மரம் நாட்டு வைபவம் இடம் பெற்றது.

தொடர்ந்து பேசியஇராஜேந்திரன், திலீபனின் போராட்ட வரலாற்று நிகழ்வுகள் பற்றி நினைவு கூர்ந்ததுடன், தமிழீழ மண்ணை மீட்டெடுக்க மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும் என்றும், அப்போதுதான் தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழலாம். என்ற கருத்தில் திலீபன் இறுக்கமான நம்பிக்கை கொண்டிருந்தார் என்றார்.

### திலீபன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த யூன்மாதம் 11ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஆரம்பமான சண்டையைத் தொடர்ந்து யாழ். கோட்டையை விடு

### திடீரென தோன்றிய இளைஞர்கள்

கோட்டையில் யுத்தம் நட

### வீர வணக்கம்

கோட்டையிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரை விரட்டியடித்த இறுதித் தாக்குதலின் போது இன்னுயிர் ஈந்த வீரவேங்கைகளுக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

பெண்புலி 2 வது லெப்டினன்ட் சிசிலியா (யூரனா பகிரத குமார் மன்னார்.) லெப்டினன்ட் நகுலன் (இராசதுரை நேசன் வத்திராயன் வடக்கு, வடமராட்சி) வீர வேங்கை: ரகு (இராசலிங்கம் றொபேட் சாந்தகுமார் கட்டுடை, மானிப்பாய்) ஆகிய மூவரும் இந்த தாக்குதலில் இன்னுயிர் ஈந்தவர்கள் ஆவர். இவர்களுக்கு தமது வீர வணக்கத்தை விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

### செஞ்சிலுவை தடுமாற்றம்

நேற்று மாலை முத்திரைச் சந்தை வழியாக வாகனத்தில் சென்றுகொண்டிருந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்க உயர் அதிகாரிகள் ஒரு சில நிமிடம் நிலைதடுமாறினார்கள்.


கோட்டை கைப்பற்றப்பட்ட மகிழ்ச்சியில் சங்கிலியன் சிலைக்கு அருகில் நின்ற மக்கள்கூட்டம் தொடர்ச்சியாக வெடிகளை சுட்டு கரகோசம் செய்தபோது அவ்வழியாக

இலட்சியத்திற்காகத் தொடர்ந்தும் போராடிக்

பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அப்படி இருந்தும்கூட எமதுபோராட்

ஒருவருக்கொருவருடன் இராணுவம் ஓடிய செய்தியை அளவளாவிக் கொண்டிருந்தனர்.

துடன் இணைந்திருந்தமையை அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது.



மூன்றுமாத காலம் புலிகளின் முற்றுகைக்குள்ளாகியிருந்த யாழ்கோட்டையின் ஒருதோற்றம்

# சிதைந்த கோட்டை காவல் அரண்கள் தரைமட்டமான பொலிஸ் நிலையம்

யாழ். கோட்டைக்கு மேலாக நேற்று காலையிலிருந்து புலிக்கொடி பறந்த வண்ணம் இருக்கின்றது. பல ஆண்டுகளாக சிங்கள இராணுவத்தின் கையிலிருந்த கோட்டை இன்று தமிழ் மக்களின்கைக்கு மாறிவிட்டது. கோட்டைக்கு மேல் புலிக்கொடி கோட்டைக்குள் இருக்கும் பூவரச மரம் ஒன்றிற்கு மேலாக கட்டி ஏற்றப்பட்டிருப்பதை கோட்டை சுற்றாடல் எங்கு நின்றுபார்த்தாலும் தெரிகிறது.

**கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் கரும்புலிகள்**

கோட்டை முகாமில் இருந்த சிறிலங்கா இராணுவத்தினர் விதைத்திருந்த மிதிவெடி, கண்ணிவெடிகளை அகற்றுவதில் விடுதலைப் புலிகளின் கரும்புலி அணி ஒன்று வெகு விரைவாக செயல்பட்டு நேற்று மாலைவரை இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால் பொதுமக்கள் எவரும் கோட்டை முகாமுக்குள் சென்று பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

**வெளியே தெரியும் காட்சி**

கோட்டை மதில் சுவரில் புலிகளின் பீரங்கி தாக்குதல்களால் பல இராணுவ காவல் அரண்கள் சேதமடைந்து போய் உள்ளன சுவர் முழுவதும் ஷெல் வெடிகள் பட்டு துளையிடப்பட்டுள்ளது. சுவர்களுக்கு மேலாக தெரியும் கட்டிடங்களில் ஓடுகள் சிதறிப் போய் உள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

**பொலிஸ் நிலைய கட்டிடம்**

கோட்டையின் எதிரே உள்ள பொலிஸ் நிலையக் கட்டிடம் சிறிலங்கா விமானங்கள் போட்ட குண்டுகளால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையத்தினை சூழவுள்ள அனைத்துக் கட்டிடங்களும் இதேகதிதான் ஏற்பட்டுள்ளது.

**நூலகம்**

யாழ்ப்பாண பொது நூலக கட்டிடமும் குண்டு வீச்சினால் பலத்த சேதத்தை கண்டுள்ளது. நூல் நிலையத்தின் நடுக் கோபுரத்தில் விமான குண்டுகளால் பெரியதுவாரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

யுத்த காலத்தின் போது இந்த நூலகத்தினை ஊடறுத்து புலிகளின் நகரும் பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இக்கட்டிடம் உணவு தயாரிப்பதற்கும் மருத்துவ வசதிகளை செய்து கொள்வதற்கும் பாவிக்கப்பட்டு வந்திருந்ததை அங்கிருந்த பொருட்கள் எடுத்துக் காட்டின.

இந்த நூலகத்தின் வெளி வீதியில் சூழநின்ற மரங்கள் யாவும் குண்டு வீச்சால் முறிந்து நாலாபக்கமும் சிதறிக் காணப்படுகின்றது. வீதிகளில் வெற்றுத் தோட்டா மூடிகளும் ஷெல் விசிறிகளும் பரவலாக காணப்படுகின்றது.

**ஏனைய கட்டிடங்கள்**

கோட்டை முகாமைச் சூழவுள்ள ஏனைய கட்டிடங்கள் யாவும் பெரும் சேதமடைந்துள்ளன பழைய சந்தைக்கட்டிடத்தொகுதி சிதறிப்போய் உள்ளன. கற்குவியல்களும் ஓட்டுத் துண்டுகளும் கால் வைக்க முடியாத அளவு சிதறி உள்ளது.

நேற்றுக் காலையிலிருந்து மண்டைதீவு இராணுவம் தொடர்ந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டது இந்த ஷெல்கள் நல்லூர் அரசடி சந்திவரை பாய்ந்தது குறிப்பிடத்தக்கதாகும் நேற்று ஆயுதங்களையும் நிலக்கண்ணி வெடிகளையும் புலிகள் மீட்டுக்கொண்டிருந்த சமயம் மண்டைதீவிலிருந்து இராணுவத்தால் ஏவப்பட்ட ஷெல்கள் கோட்டையை சுற்றி விழுந்தது.

**குண்டு வீச்சு**

கோட்டைக்குள் இருந்து இராணுவம் ஓடிவிட்டதும் நேற்றுமாலை மூனறு மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று நைதரசன் குண்டுகளை வீசியதில் நகரின் மேலாக புகைமண்டலம் எழுந்தது குண்டுகளில் ஒன்று மணிக்கூட்டு வீதியில் அசோக் ஹோட்டல் முன்பாக வீழ்ந்து வெடித்தது.

**வெளிநாடடு நிருபர்**

கோட்டை இராணுவம் ஓடியதும் நேற்று வெளிநாட்டு நிருபர்களும் அப்பகுதிக்கு வந்து விட்டனர். புலிகளுடன் கோட்டை மூகாம் நிலைமை பற்றி அறிந்து கொண்டனர்.

இவ்வாறு நேற்றைய கோட்டை முகாமும் அதனை சூழவுள்ள பகுதிகளின் நிலைமையும் இருந்தது. (லோ)

**கோட்டையை**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறுதீவிற்கு தப்பியோடினர். அங்கு வைத்தும் இராணுவத்தினர் தாக்குதலுக்கு உளளாக்கப்பட்டு அனைத்துப் படையினரும் மண்டைதீவிற்கு விரட்டப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டையில் இருந்து இராணுவத்தை விரட்டிய நாள் ''இந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ அன்றுதான் எமது சுதந்திர விடிவின் ஆரம்பம்'' என்ற லெப். கேர்ணல் திலீபனின் மூன்றாம்ஆணடுநினைவு நாள் என்பதும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கொக்குவில் மனோன் மணி சனசமூக நிலையத்தில்நேற்று திலீபனின் 3-ம் ஆண்டு நினைவுதின வைபவம் கொக்குவில் மத்தி கிழக்கு சிற்றூரவை உறுப்பினர் செ. இராசேந்திரம் தலைமையில்நடைபெற்றது

முற்பகல் 11. மணியளவில் ஆலய மணி ஒலிக்க, இதுவரை தமிழ் மண் மீட்புக்காக உயிர் நீத்த விடுதலைப் புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் 2 நிமிடங்கள் மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமா

**திலீபன்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த யூன்மாதம் 11ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஆரம்பமான சண்டையைத் தொடர்ந்து யாழ். கோட்டையை விடுதலைப் புலிகள் முற்றுகை இட்டிருந்தனர். இக்கோட்டை முற்றுகையை முறியடிக்க சிறிலங்காவின் முப்படைகளும் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டு வந்தன. இதன் உச்சக்கட்டமாக கடந்த பதின்மூன்றாம் திகதி முப்படைகளும் மேற்கொண்ட இராணுவநடவடிக்கை தோல்வியில்முடிவுற்றது. இந்நடவடிக்கையில் ஐம்பதிற்குமேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு 150க்கு மேற்பட்டஇராணுவத்தினர் காயம் அடைந்தனர் என்பதும் தெரிந்ததே

இந்நிலையில் யாழ். கோட்டை மீது நேற்றுமுன்தினமிரவு விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலில் விடுதலைப்புலிகளினால் 'பசீலன் 2000' ஷெல்கள் பாவிக்கப்பட்டன, இத்தாக்குதலைத் தொடர்ந்து கோட்டை முகாமிற்குள் நிலைகொண்டிருக்க முடியாத இராணுவத்தினர் கடல்வழியாக முகாமை விட்டுத் தப்பி ஓடிவிட்டனர்,

இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கள் பற்றிய தகவல்கள் அச்சுக்குப் போகும்வரை தெரியவில்லை,

நிலையத் தலைவர் திரு. இராசநாயகம் தலைமையில் மரம் நாட்டு வைபவம் இடம் பெற்றது.

தொடர்ந்து பேசியஇராஜேந்திரன், திலீபனின் போராட்ட வரலாற்று நிகழ்வுகள் பற்றி நினைவு கூர்ந்ததுடன், தமிழீழ மண்ணை மீட்டெடுக்க மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும் என்றும், அப்போது தான் தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழலாம். என்ற கருத்தில் திலீபன் இறுக்கமான நம்பிக்கை கொண்டிருந்தார் என்றார்.

## திடீரென தோன்றிய இளைஞர்கள்

கோட்டையில் யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம் வீடுகளில் முடங்கிக்கிடந்த இளைஞர்கள் புற்றுக்குள்ளிருந்து ஈசல்கள் வெளியேறியது போல் சாரிசாரியாக சைக்கிளில் பவனிவந்தனர்.

ஆரம்பத்தில் மக்கள் கோட்டையைக் கைப்பற்றப்பட்ட செய்தியை நம்பமுடியாத நிலையில் தத்தளித்தனர். சிறிது நேரத்தில் ஒவ்வொரு செய்தியாக வரவர வெடியோசையும் அதிகரித்தது. சந்தேகங்கள் தீர்ந்தன. (லோ)

**4 இளைஞர்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகுதி நான்கு இளைஞர்களையும் தம்முடன் கூட்டிச் சென்றனர். இவர்கள் இப்பொழுது எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றியும் இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் இதுவரை எதுவும் தெரியவில்லை (க)

**உடுப்பிட்டி**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொம்மர் விமானங்கள் ஆகாயத்தில் வட்டமிட்ட போது அப்பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்ததினால் மேலதிக உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. (க


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

**நூற்றாண்டு நிறைவு நாள்**

29 . 09 . 1990 சனிக்கிழமை

மு. ப. 8-30 அருள்மிகு சிவஞான வைரவர்கோயிலில் சிறப்பு வழிபாடு

மு. ப. 9-30 வாழ்த்துரைகள்

மு. ப. 10-30 சிறுவர்களுக்கு ஏடுதொடக்கல்

மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் முன்னாள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், அபிமானிகளைஅன்புடன் அழைக்கின்றோம்.

க. சி. குகதாசன் அதிபர்

சு, டிவகலாலா செயலாளர் ப. மா. ச.

க. பூபாலசிங்கம் பா. அ. ச. செயலாளர்

B/1432


ரகு (இராசலிங்கம் றொபேட் சாந்தகுமார் கட்டுடை, மானிப்பாய்) ஆகிய மூவரும் இந்த தாக்குதலில் இன்னுயிர் ஈந்தவர்கள் ஆவர். இவர்களுக்கு தமது வீர வணக்கத்தை விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

## செஞ்சிலுவை தடுமாற்றம்

நேற்று மாலை முத்திரைச் சந்தை வழியாக வாகனத்தில் சென்று கொண்டிருந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்க உயர் அதிகாரிகள் ஒரு சில நிமிடம் நிலைதடுமாறினார்கள்.

கோட்டை கைப்பற்றப் பட்ட மகிழ்ச்சியில் சங்கிலியன் சிலைக்கு அருகில் நின்ற மக்கள்கூட்டம் தொடர்ச்சியாக வெடிகளை சுட்டு கரகோசம் செய்தபோது அவ் வழியாக சென்ற சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் துப்பாக்கி வேட்டுக்கள் என எண்ணி நிலைதடுமாறி தமது வாகனத்தை திடீரென ஓரமாக நிறுத்தினார்கள். பின்னர் விடயம் அறிந்ததும் பயணத்தை தொடர்ந்தார்கள். (க)

**நகரிலிருந்து**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட படங்களின் முன்பாக குத்துவிளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன.

கைதடி, கல்வியங்காடு, ஊரெழு சண்டிலிப்பாய், கொடிகாமம், சாவகச்சேரி, நெல்லியடி பருத்தித்துறை, போன்ற பல்வேறு இடங்களில் நினைவு தூபிகள அமைக்கப்பட்டு நினைவுப் பேருரைகள் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலராலும் நிகழ்த்தப்பட்டது. அதேவேளை கோயில்கள், சனசமூக நிலையங்கள் என்பனவற்றில் உண்ணாவிரதங்கள் நடைபெற்றன. திலீபனின் திருவுருவப்படத்தை தாங்கிய ஊர்தி பவனிகள் தெருக்களில் வலம் வந்தன.

வடமராட்சி தென்மராட்சி வலிகாமம், தீவுப்பகுதி உட்பட அனைத்துப்பகுதிகளிலும் உள்ள ஆலயங்களிலும் திலீபன் உயிர் பிரிந்தஅந்தக்கணப் பொழுதில் மணியோசைஎழுப்பப்பட்டு விசேட பூசைகள் ஆரம்பமாயின. அதே நேரத்திலேயே யாழ். மாவட்ட தளபதி பானு கோட்டையில் புலிக்கொடியை ஏற்றி வைத்தார்என்பதுகுறிப்பிடத்தக்கது

**கட்டுரைப் போட்டிகள் கவிதை அரங்குகள்**

தியாகி திலீபனின் நினைவாக நேற்று அவர் பிறந்த இடமான ஊரெழு உட்படப் பல இடங்களிலும கட்டுரைப் போட்டிகளும் கவிதை அரங்குகளும் நடாத்தப்பட்டு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப் பட்டன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது